# எல்சுக்கி (பெற்றோர்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து)

**உலகம் சர்வதேசமயமாகிவிட்டது, அதோடு பாடசாலை அறைகளும் கூட. இந்தத் திட்டம் எல்சுக்கி விஷேஷமாக பல மொழிகளைப் பேசும் பெற்றோருக்கும், அதோடு ஐரோப்பிய கலாச்சார வட்டத்திற்குள் இல்லாதவர்களுக்கும்.**

**எப்படி பெற்றோர்கள் அவர்களினுடைய பிள்ளைகளுக்கு சுவிஸ் பாடசாலையில் (கல்வி கற்பதில்) உதவி செய்யலாம்?**

எல்சுக்கி திட்டத்தில் பெற்றோருக்கு ஒரு உதவி அளிக்கப்படுகிறது, அவர்களினுடைய பிள்ளைகளுக்கு படிப்பில் குறிக்கோளை (லட்சியத்தை) அடைவதற்கு ஒவ்வொரு கட்டத்திலும் அதற்குத்தக்க மாதிரி சரியாக உதவுவார்கள்.
எல்சுக்கி உள்ளடக்கி இருக்கிறது:

- பெற்றோருக்கான வகுப்பு ஒரு பாடசாலை வருஷத்திற்கு 10 பாடங்கள் வரைக்கும்
- கின்டர் காடன் இலிருந்து மூன்றாவது வகுப்பு வரையும்
- வீட்டுவேலைத் தாள்கள் 7 பாஷைகளில்
- வகுப்பு நிர்வாகம்: கின்டர் காடன் ஆசிரியை அல்லது வகுப்பு ஆசிரியர்
- பின்நேரவகுப்பு நடந்துகொண்டிருக்கும் பொழுது பிள்ளைகளை பராமரிப்பது
- பெற்றோர்கள் இலவசமாக பங்கெடுத்துக்கொள்ளலாம்

இந்த எல்சுக்கி வகுப்புகள் நடத்தப்படுவது கின்டர் காடன் ஆசிரியை அல்லது வகுப்பு ஆசிரியர் மூலம் அவர்களிடம் படிக்கும் பிள்ளைகளின் பெற்றேருக்கு. அவர்கள் ஒரு பயிற்சியில் இதற்கு தயார் செய்யப்படுவார்கள். ஒரு மேலதிகமான கவனம் செலுத்துவதற்கு ஒரு கொட்லைன் (ஒரு குறிப்பிட்ட தொலைபேசி எண்ணை அழுத்தினால் தொலைபேசி மூலம் தகவல்கள் கொடுப்பார்கள்) இருக்கிறது.

## வகுப்பின் உள்ளடக்கம்

இந்த பின்னேர வகுப்புக்களில் பெற்றோர்கள் எங்களுடைய பாடசாலையின் குறிக்கோளையும் அதோடு முறைகளையும் அறிந்து கொள்ளலாம். இதிலே முக்கியமாக பயிற்சிகள் இருக்கின்றன. படிப்பு சம்மந்தமான விளையாட்டுக்களை முயற்சி செய்வார்கள், பெற்றோருக்கு வீட்டு வேலை கிடைக்கும், அதை அவர்கள் வீட்டிலே அவர்களினுடைய பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். இப்படி பெற்றோர்கள் தெரிந்து கொள்வார்கள், எப்படி அவர்களினுடைய பிள்ளையின் ஆசிரியர் படிப்பிப்பார் என்று. இது அதிகமாக ஒரு நிச்சயமான பிரதிபலிப்பாக இருப்பதோடு பாடசாலையில் நல்ல முன்னேற்றம் அடைய காரணமாக அமையலாம்.

பேச்சுவார்த்தைகளில் பலவிதமான பாடசாலை முறைகளின் ஒத்ததையும் வித்தியாசங்களையும் தேர்ந்தெடுத்து ஒழுங்கு படுத்துவார்கள். தன்னுடைய சொந்த பாடசாலை அனுபவத்தை யோசிக்கும் பொழுது அதை ஆதாரமாகப் பயன்படுத்தலாம். குறிக்கோள் வந்து, ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் இடையிலுள்ள ஒத்துழைப்பானது பிள்ளைகளின் முன்னேற்றத்தைப் பலப்படுத்துவதற்கு சேர்ந்து முயற்சி செய்வது ஆகும்.